திருவள்ளுவர் ஆண்டு 2041

டிசம்பர் - 2010

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 2

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



14-09-1901
மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# குறையட்டும்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

ஆசைகளைக் குறையுங்கள்; அமைதி கிட்டும் !
அருவருப்பைக் குறையுங்கள்; உறவு கிட்டும் !
பேசுவதைக் குறையுங்கள்; வெற்றி கிட்டும் !
பிழைகளினைக் குறையுங்கள், உயர்வு கிட்டும் !
ஏசுவதைக் குறையுங்கள்; இனிமை கிட்டும் !
இழிசெயலைக் குறையுங்கள்; ஏற்றம் கிட்டும் !
பூசல்களைக் குறையுங்கள்; நேசம் கிட்டும் !
பொறாமையினைக் குறையுங்கள்; புகழும் கிட்டும் !

விளைநிலத்தில் களைகுறைந்தால் விளைச்சல் ஓங்கும் !
விடிவெள்ளி ஒளிகுறைந்தால் விடியல் தோன்றும் !
அளவின்றி உண்பதுவும் குறைந்தால் தானே
அண்டிவரும் நோய்களினைத் தடுத்தல் கூடும் !
பிளவுசெயும் சாதிவெறி குறைந்தால் தானே
பேதமிலாச் சமுதாயம் உருவாய் ஆகும் !
களவுகளும் ஊழல்களும் குறைந்தால் அன்றோ
காணும்நம் திருநாடு நிமிர்ந்து நிற்கும்?

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 55 திங்கள் இதழ்
பகுதி : 2 திருவள்ளுவர் ஆண்டு 2041
திசம்பர் 2010



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சங்க இலக்கியங்கள் காட்டும் வரதட்சனையில்லா மணவாழ்வு | *முனைவர் பி. இந்திராகாந்தி* | 4 |
| ஆ.மாதவன் சிறுகதைகளில் அனுபவத்தளம் | *நா. நாகராஜன்* | 9 |
| பதிற்றுப்பத்து காட்டும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | *முனைவர் ஜோ. பிரின்ஸ்* | 14 |
| சொல்லாமல் சொல்கிறார் | *ஆறுவிரல் ஐம்பொறி* | 18 |
| விட்டிசை இலக்கணத்தில் பத்தாமை | *முனைவர் க. பரமேஸ்வரன்* | 20 |
| கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைகளில் புதுமைகள் | *கோ. கலைச்செல்வன்* | 28 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

செந்தமிழ் திசம்பர் இதழ் தங்கள் கைகளுக்குக் காலதாமதமாகக் கிடைத்திருந்தாலும், கவின் பெறும் இலக்கியச் சிந்தனைகளைத் தாங்கிவரும் காலப்பெட்டகமாகத் தங்கள் கைகளில் தவழவிட்டிருக்கிறோம். வரதட்சணை இல்லாது வரன் பெறும் முறை நமது சங்ககாலத் தமிழர் வாழ்வு என்பதை முனைவர் பி. இந்திராகாந்தி அவர்கள் தகுந்த இலக்கியச் சான்றுகளோடு எடுத்தியம்பியுள்ளார்.

சிறுகதைகளின் செப்பேட்டுத் தளமாக ஆ. மாதவன் அவர்களின் சிறுகதைகள் திகழ்வதை நா. நாகராசன் நிறுவ முயன்று வெற்றிபெற்றிருக்கிறார். சங்க இலக்கியங்களில் வரலாற்றுப் பதிவுகள் பதிற்றுப்பத்தில் மிகுதி; ஆடு கோட்பாட்டுச் சேரலாதலின் வரலாற்றுச் சான்றுகளோடு கூடிய சங்க இலக்கியப் பதிவுகளை முனைவர் ஜோ. பிரின்ஸ் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

அறிஞர் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் திருக்குறளில் 'அறம், கோடி' என்னும் சொற்களைப் புதிய நோக்கில் ஆய்வு செய்கிறார். முனைவர் க. பரமேஷ்வரன் அவர்கள் பொறாமை தொடங்கி இல்லாமை ஈறாகப் பத்து வகையான ஆமைகளை விட்டிசை இலக்கணத்தில் விளக்கியிருப்பது பாராட்டிற்குரியது.

புதுக்கவிதைகளுக்கு என்று புதிய வரவேற்பு நிகழ்கால இளைஞர்களிடம் நிறையவே காணப்படுகின்றது. அந்த வகையில் கோ. கலைச்செல்வன் அவர்கள் கவிஞர் வைரமுத்துவின் கவிதைக்குள் புகுந்து புதுமைகளைத் தேடித் இருக்கின்றார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள் குறையட்டும் என்ற தலைப்பில் குறையாத மரபுக் கவிதையைத் தந்து குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிருகிறார். இம்மாத இதழ் பருகுவோரைப் பரவசப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

# சங்க இலக்கியங்கள் காட்டும் வரதட்சனையில்லா மணவாழ்வு

*முனைவர் பி. இந்திராகாந்தி*
தஞ்சாவூர்

அறிவு, ஆற்றல், வலிமை, திறமை என்பவற்றோடு அன்பு, அருள், கருணை ஆகிய மனிதப் பண்புகளையும் கொண்ட பெண் இச்சமூகத்தில் ஓர் அங்கமாக விளங்கக்கூடியவள். இவளைப் பேசாத இலக்கியங்கள் இல்லை. பாடாத கவிஞர்கள் இல்லை. வள்ளுவப் பெருந்தகை பெண்ணின் மேன்மைதனைச் சொல்லும் முகத்தான்,

*பெண்ணின் பெருந்தக்க யாளவு கற்பென்னும்*
*திண்மை உண்டாகப் பெறின்.*

ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்டப்பொருள் எதுவும் இல்லை, அவளிடம் கற்பு என்னும் கலங்காத நிலமை உண்டாகப் பெறின் என்கிறார். பாவேந்தன் பாரதிதாசனோ,

*வண்மை உயர்வு*
*மனிதர் நலமெல்லாம்*
*பெண்மையினால் உண்டென்று*

என்று பாடி மகிழ்ந்தார்.

கவிஞர் கண்ணதாசன் பெண்மையின் சிறப்பை,

*பெண்ணில்லாமல் பிறப்பில்லை*
*பெண்ணில்லாமல் சுகமில்லை*
*பெண்ணில்லாமல் சுவையில்லை*
*பெண்ணில்லாமல் உலகில்லை*

என்று பாடிமகிழ்ந்தார். இத்தகு சிறப்புத்தன்மையுடைய பெண்ணை ஓர் ஆண்மகன் வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள பெண் வீட்டாரிடமிருந்து தட்சனையாகப் பொருள் பெரும் மிகப்பெரிய சமூகக்

கொடுமை இன்று நானிலத்தில் நிகழ்கிறது. இக்கொடுமையால் குறிப்பிட்ட வயது வந்தும் திருமணம் புரிந்து கொள்ள முடியாமல் பெற்றோர்கள் மனவேதனை அடைந்து துயரப்படுவதற்கும் பெண்கள் காரணமாகின்றனர். இத்தகைய கொடுமையான நிகழ்வுகள் சங்க காலத்தில் இல்லை.

### சங்க இலக்கியங்களில் மணவாழ்வு

பழந்தமிழ் நூல்கலான சங்க இலக்கியத்தில் வரனுக்குத்தட்சனைக்.கொடுத்து திருமணம் செய்து கொள்கின்ற வழக்கம் இருந்ததாக எவ்விடத்திலும் சுட்டப்பெறவில்லை. இப்பழக்கம் தமிழர்தம் வாழ்வியலையும் பண்பாட்டையும் விளக்கும் இலக்கியங்களில், திருமணம் செய்து கொள்வதற்கு வரதட்சனைப் பெற்று மணமகன் பெண்ணை மணந்தான் என்றோ, பெண்வீட்டார் தட்சனைக் கொடுத்து மணம் முடித்தார் என்றோ இல்லை. ஆனால், பெண்ணுக்குப் பரிசம் கொடுத்து மணந்தார் என்ற நிலை உள்ளது.

### அகப் பொருள் காட்டும் திருமண வகைகள்

தமிழ் அகப்பொருள் இலக்கண நூலான நம்பியகப் பொருள்,

*உளமலி காதற் களவெனப் படுவ*
*தொரு நான்கு வேதத் திருநான்கு மன்றலுள்*
*யாழோர் கூட்டத் தியல்பின தென்ப*

இந்நூற்பாவில் கூறப்படும் இருநான்கு மன்றல்கள் பிரமம், பிரசாபத்தீயம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என இந்நூலாசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

இவ்வெட்டுவகை மணங்களில் வரதட்சனை மணம் என்று எதிலும் இடம் பெறவில்லை.

### சங்கப்பாடல்கள் காட்டும் திருமண முறைகள்

சங்க இலக்கியங்களில் களவு மணம், மரபு மணம், பரிசங் கொடுத்து மணத்தல், சேவைமணம், ஏறுதழுவி மணத்தல், போர் நிகழ்த்தி மணத்தல், மடலேறி மணத்தல் என்ற நிலையில் திருமணங்கள் நடை

பெற்றதை விளக்குகின்றனவே தவிர வரதட்சனை கொடுத்துப் பெண்கள் ஆண்களை மணந்ததாக இல்லை.

களவு மணத்தினைக் காட்டும் சங்க இலக்கியக் கலித்தொகைப் பாடல்,

*ஒன்றிநாம்பாட, மறை நின்று கேட்டு அருளி*
*மென்தோட் கிழவனும் வந்தனன், நுந்தையும்*
*மன்றல் வேங்கைக் கீழ் இருந்து*
*மணம் நயந்தனள் அம் மலைகிழ வோற்கே*

என்ற வரிகளில் களவு மணம் கொண்ட தலைவிக்குத் தந்தையின் மனம் களவு கொண்ட தலைவனுக்கு மணம் முடிக்க இசைவு தந்ததை விளக்குவதாக அமைந்துள்ளது.

மரபு மணம் நிகழ்ந்ததைச் சங்க இலக்கிய அகப்பாட்டு,

*நனைவிளை நறவின் தேறல் மாந்திப்*
*புனைவினை நல்இல் தருமணல் குவைஇப்*
*பொம்மல் ஒதி எம்மக்கள் மணம் என*
*வதுவை அயர்ந்தனர் நமரே*

அன்று இல்லத்தில் கொண்டுவந்து மணலைப் பரப்பி, பொலிவுடைய எம் மகளுக்குத் திருமணம் எனச் சொல்லி மணத்துக்கு வேண்டுவனவற்றைச் செய்யலாயினர், இந்நிகழ்ச்சி மரபு முறை திருமண நிகழ்வை விளக்குகிறது.

பரிசம் கொடுத்து மணம் முடித்ததைப் புறநானூற்றுப் பாடல்,

*முழங்குகடல் முழவின் முசிறியன்ன*
*நலஞ்சால் விழுப்பொருள் பணிந்து வந்து கொடுப்பினும்*
*புரையர் அல்லோர் வரையலார் இவன் எனத்*
*தந்தையும் கொடா அன்*

உயர்ந்த பொருளை உவகையுடன் தந்தாலும் இவள் ஒரு போதும் உயர்ந்தோர் அல்லாதோரை மணந்துகொள்ள மாட்டாள் என்று மொழிந்து தந்தையும் அளிக்க மாட்டான் என்று விளக்குகிறது. இவ்வரிகளின் மூலம் பெண்ணுக்குப் பரிசுப் பொருள் கொடுத்து மணந்த நிலை தமிழ்நாட்டில் இருந்ததை அறியமுடிகிறது.

சேவைமணம் நிகழ்ந்ததை அகநானூற்றுப் பாடல் இவ்வாறு விளக்குகிறது.

*தருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்*
*கண்திரள் முத்தம் கொண்டு, ஞாங்கர்த்*
*தேன் இமிர் அகன் கரைப் பகுக்கும்,*
*கானல் அம் பெருந்துறைப் பரதவன் எமக்கே?*

நாம் தாங்கும் இந்த நாட்டில் இருப்பதைக் கைவிட்டுப் போய் அவனுடன் கூடிய பெரிய பெரிய கடற்கரையை அடுத்த உப்பு வயலில் உப்புப்பொதியுடன், திரிந்து வருந்தியும் பெரிய கடலின் ஆழத்தில் புணையில் சென்றும், அவனுடைய வயமாகிப் பணிந்தும் சார்ந்தும் இருப்பின் அறத்தை எண்ணிப் பார்த்த அவளை தமக்குத் தருவானோ!? இப்பாடலின் இக்கருத்து, அன்று தலைவியின் தந்தைக்குப் பல வேலைகளைச் செய்து கொடுத்தாலும் மணம் செய்து கொடுக்க விரும்புவானோ? இப்பரதவன் என்று விளக்குகிறது இப்பாடல்.

ஏறுதழுவி மணம்முடித்தல் நிகழ்ந்ததைக் கலித்தொகை,

*மண்ணிமாசு அற்றநின் கூழையுள் ஏற அவன்*
*கண்ணி தந்திட்டது எனக்கேட்டு, திண்ணிதா*
*தெய்வமால், காட்டிற்று இவட்கு என நின்னை அப்*
*பொய் இல் பொதுவற்கு அடை சூழ்ந்தார் தந்தையோடு*
*ஐயன் மார் எல்லாம் ஒருங்கு*

நின் களவொழுக்கத்தைப் பிறர் அறியாமல் ஒழுகவல்ல இடையனுக்கு மணம் செய்து தருதலை ஆராய்ந்தனர் என்று சொல்லும் வரிகளின் மூலம் ஏறு தழுவி மணமுடிக்கும் வழக்கம் இருந்ததை உணரமுடிகிறது.

போர் நிகழ்த்தி அன்று மணமுடித்த நிலைதனை,

*மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ*
*ஆரமர் உழக்கிய மறம்கிளர் முன்பின்*
*நீள் இல்லை எஃகம் மறுத்த உடம்பொடு*
*வாரா உலகம் புகுதல் ஒன்று - எனப்*
*படை தொட்டனனே குருசில்*

என்ற வரிகள், விளங்கும் அணிகளால் பொலிவு மிக்க மணமாகாத மென்மையான இயல்பையும், சுணங்கு ஏற்பட்ட முலையையும் உடைய அவளுடனே மணம் செய்து கொள்ளும் நாள் நாளே ஆகட்டும் அல்லது கடப்பதற்கரிய போரைச் செய்தற்கரிய மறமாகி தீ கிளரும் வன்மையையுமுடைய வேலால் புண்பட்டு வடு ஏற்பட்ட உடலுடனே மேல் உலகம் செல்வது என்ற இரண்டில் ஒன்று ஆகுக என்று அன்று போர் நிகழ்த்தி மணம் முடித்த நிகழ்வினை விளக்குகிறது.

மடலேறி மணம் முடித்த நிகழ்வினைக் கலித்தொகைப் பாடல்,

*என்று ஆங்கே*
*வருந்த மா ஊர்ந்து, மறுகின் கண் பாட*
*திருந்திழைக்கு ஒத்த கிளவி கேட்டு, ஆங்கே*
*பொருந்தாதார் போர் வல் வழுதிக்கு அருந்திறை*
*போல கொடுத்தார், தமர்.*

அவ்வூர்த் தெருவில் கண்டவர் வருந்த மடல் மாவை ஏறிப் பாடிட திருந்திய அணியை உடையவனைத்தான் பெறுவதற்குரிய சொற்களைச் சொல்லக் கேட்டனர்; பகைவர் போர்த் தொழிலில் வல்ல பாண்டிய மன்னனுக்கு அஞ்சி அரிய திறை கொடுக்குமாறுபோல், தம் குடிக்குப் பழுதாம் என்று அஞ்சி, அவளை அங்கேயே தந்தனர் என்று அன்று பெண்களை மடலேறி மணக்கத் துணிந்ததையும் அதற்கு முன்பு பெற்றோர் மணம் முடித்துத் தந்த நிகழ்வினையும் இவ்வரிகள் விளக்குகின்றன.

அழகு பொதிந்ததும் சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான இத்திருமணமுறைகள் தவிர இன்று நடப்பதுபோல் தட்சனைக் கொடுமை திருமண முறைகள் நடக்கவும் இல்லை; பெண்ணைப் பெற்றவர்களும், பெண்ணும் சொல்லொண்ணாத் துயரத்தை அடையவும் இல்லை.

# ஆ.மாதவன் சிறுகதைகளில் அனுபவத்தளம்

*நா. நாகராஜன்*
அண்ணாமலை நகர்

## முன்னுரை

சிறுகதை ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தமக்கேயுரிய கருத்தாடல்களுடன் களம் அமைத்துக் கொண்டு கதைப்பின்னல், வடிவம், தொடக்கம், முடிவு போன்ற கதைநெறிக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு மாந்தர்களையும் நிகழ்வுத் தளங்களையும் உருவாக்கிக் கதையை வெளிப்படுத்தும் போது கதையின் சிறப்பு இலக்கியத்தில் பேசப்படுகிறது. வாசகர்களின் ஈர்ப்பு கதையாசிரியர்களின் படைப்பாற்றலால் பண்படுத்தப்பட்டு மேலும் மேலும் படிக்கவும் சிந்திக்கவும் தூண்டுகின்றன. ஒரு கதை பெரு வெற்றி பெறுவதும் தோன்றிய நிலையிலேயே புகழ் பெறுவதும் அவர்கள் அமைத்துக் கொள்ளும் அனுபவத் தளத்தைப் பொறுத்ததேயாகும். வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு காட்சியும் ஒரு கதை உருவாக்கத்திற்கு ஒரு மையப்புள்ளியை ஏற்படுத்தித் தருகின்றது. அம்மையப் புள்ளியைக் கொண்டே படைப்பாளி மிகச் சிறந்த கதையைப் படைக்கின்றார். அந்த வகையில் ஆ.மாதவன் அவர்கள் உருவாக்கி அமைத்துக் கொண்டுள்ள வாழ்கை அனுபவத்தளங்களின் பதிவுகளை முன்வைத்து இந்தக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

ஆ. மாதவன் தென்தமிழகத்தின் இறுவாயில் இருந்துகொண்டு எழுதத் தொடங்கிய அறுபதுகளில் மிகச் சாதாரண ஒருவராகவே விளங்கியுள்ளார். தொடக்கத்தில் புதின எழுத்தாளராகவே இருந்துள்ளார். அவருடைய புனலும் மணலும், கிருஷ்ணப்பருந்து இரண்டும் சிறப்பான படைப்புகளாகும். தீபம், கணையாழி, தாமரை போன்ற இலக்கிய இதழ்களில் சிறுகதைகள் பல எழுதியபோதுதான் சிறுகதைக்குரிய

நெறிமை என்ன என்பதை உணர்ந்து எழுதியவர். மாதவனின் தொடக்ககால சிறுகதையாக்கத்தில் சுசிலாவின் கதை, காமினிமூலம் போன்ற கதைகள் பேசப்பட்டுள்ளன. மோகப்பல்லவி முதல் புறாமுட்டை வரையில் தொகுக்கப்பட்டுள்ள அறுபத்தைந்து கதைகளில் பெரும்பாலான கதைகளுக்கு வணிகச் சூழலையே அனுபவத்தளமாகக் கொண்டு எழுதியுள்ளார். அதனால்தான் ஒரு கதைத் தொகுப்பிற்குக் கடைத்தெருக் கதைகள் என்று பெயர் வைத்திருந்தார். கதைகளில் இடம் பெறும் மாந்தர்கள் பொருளை மையப்படுத்தியே படைக்கப்படுவதும் இயல்பு நிலையிலிருந்து மாறிப் பணம் படைக்க வழி ஏற்படுத்தப் பார்ப்பதுமான நிலையால் அவர்தம் கதைகள் வாணிபத் தளத்தினோடே கருக்கொண்ட கதைகளாகப் பின்னப்பட்டுள்ளன.

பாச்சி என்னும் கதையைக் கடைத்தெருவில் உருவாகிக் கடைத்தெருவில் முடிவதாக அமைத்துக் கொண்டுள்ளார். பாச்சி ஒரு நாயின் கதைதான் என்றாலும் கடைத்தெருவில் நிகழும் வணிகத்தளத்தை அனுபவப் பதிவாக்கியுள்ளார். கடைத்தெரு வாழ்க்கையில் அனைத்துப் பரிமாணங்களுடன் சொல்லப்பட்டுள்ள செய்திகள் சுவையானவை. கடைத்தெருவில் நாணு என்பவன் பதினெட்டு வயதில் பிழைப்பிற்காக வந்து உழைத்து அவனுக்குச் சொந்தமாக சாலைக்கடை ஒன்றை ஏற்படுத்திக் தந்ததும் கடைத்தெருதான். அப்போதுதான் பாச்சி ஓடி வந்து உறவு கொண்டு அவனிடத்தே அடைக்கலமாகி விடுகிறது. பின்னாளில் அவனுக்கு உழைக்க இயலாத சூழல் வரும்போது பாச்சியின் உதவியால் கடைகளின் பாதுகாப்பு என்ற ஒன்றைப் பெறுகிறான். உழைப்பு, காவல் எல்லாம் பாச்சியால்தான் என்பதை நாணு உணர்கின்றான் . ஆனால் பாச்சிற்குத் தெரியாது. பாச்சி சேட்டுக்கடைக்குப் பாதுகாப்பு, திருட்டைக் கண்டுபிடித்துத் தந்தது போன்றவற்றால் சேட்டுவின் நன்மதிப்பையும் பெற்றது. பாச்சி இறந்தபோது நாணுவிற்கு வாழ்க்கை இல்லை என்ற நிலை உருவாகிவிடும் என்று துன்பப்பட்டான். ஓருயிரின் மதிப்பு பொருள் சார்ந்ததாகவே பின்னப்பட்டுள்ளது. கடைத் தெருவில் சேட்டு வந்து நாயின் இறுதியாத்திரைக்குப் பணம் தந்து செலவழித்த நிலையும் எண்ணத்தக்கது.

கடைத்தெரு என்ற களம் தன்னை வந்து அண்டிப் பிழைப்போரை, அவர்களின் இயல்பை மாற்றிவிடும் என்ற வாழ்க்கை அனுபவத்தைப் புலப்படுத்தி வணிகத் தளத்தை மிக அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆ. மாதவன் உருவாக்கிய மற்றொரு படைப்பான விசுவரூபம் கதையில் இடம்பெறும் ஏக்கியம்மாள் எண்ணத்தக்கவள். சிற்றூர் வாசம் மாறாத பெண்ணாக வந்து, கடைத் தெருவில் உள்ள ரெட்டியார் கடையில் தானியம் தூய்மை செய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். அவளைக் க்டைத்தெருவில் அக்கம் பக்கம் உள்ள உழைப்பு ஆசாமிகள், உழைக்காத ஆசாமிகள் எல்லாம் தன்வயப்படுத்த முயன்றும் குனிந்த தலை நிமிராமல் உழைப்பு ஒன்றையே பெரிதென நினைத்து நாள்தோறும் கடைத்தெருவைத் தாண்டி சென்று வுாழ்ந்து வந்தாள். அவள் மனத்துள்ளும் ஒரு கடை இயங்கிக் கொண்டுதான் இருந்தது. ஒரு நாள் சைக்கிளில் வந்த சிறுவன் அவள் மீது மோத நேரிட்டபோது கடைத்தெருவே அலரும்படி கூச்சலிட்டாள். அப்போது கடைத்தெருவின் மொழி இயக்கம் எல்லாம் மாறிவிடுகிறது. கடைத்தெரு என்ற தளம் விற்பனை செய்வது வாங்குவது செல்வது என்ற இயங்குநிலைகளுக்கு அப்பால் மனித வாழ்கை நிலை என்ற சூழலுக்கு மாறும்போது அமைதி மாறும் நட்டம் மாறி இலாப நோக்கு பற்றிய மதிப்பீடுகளில் மனிதர்கள் மாறி விடுகின்றனர். ஆக சிறுகதைகளில் மாதவன் வாணிபத்தளத்தையே பெரிதும் மையப்படுத்தியுள்ளமை அறியத்தக்கது.

அழுகை என்ற கதையில் இடம்பெறும் சாரதாவின் கதையாளுமையும் கடைத்தெருவையே உள்ளீடாக வைத்து எழுதப்பட்டது. அவளுக்கு அமைந்த வாழ்க்கைச் சூழல் விவசாயம் பற்றியது என்றாலும் அவை செயல்படும் விதம் வணிக நோக்கம் கொண்டது. காரணம் வீட்டில் கோழியிடும் முட்டைகளையும் விளையும் முருங்கைக் காய் மற்றுமுள்ள காய்கறிகள் யாவற்றையும் பணமாக்க அவள் கடைத்தெருவிற்கே வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. கிராமத்தில் ஒழுக்கநெறியில் வாழ்ந்த அவள் நகர வாழ்க்கையில் ஒரு மருத்துவமனையில் வேலை செய்யும்போது அவளுக்கு இரட்டிப்பு

ஊதியம் பெறுவதற்கான வழியையும் தெரிந்து கொள்கிறாள். பாலியல் உணர்வுகளால் அவள் தூண்டப்படும் போதும் எவ்வித எதிர்வினையும் காட்டாது உடன்படும் நிலை மனித வாழ்வில் ஏற்படும் மாற்றத்தை உணர வைத்துள்ளார். அவளிடம் அமைந்துள்ள அழுகைக்கு யார் காரணமாக முடியும்? அதற்குரிய பொருள் நிலையாக்கத்தைப் பார்க்க எண்ணுகையில் அவளிடம் அமைந்த துன்பம், இன்பம், நெகிழ்வு என வீட்டு வறுமையில் ஏற்பட்டவை நீங்கிவிடும். ஆனால் கடைத்தெரு வாழ்வின் மதிப்பீடு என்று வரும்போது யார் அதனைப் போக்கமுடியும். தவறு என்று எப்படி அவள் வாழ்க்கையை முன் வைக்க முடியும்? இயலாது என்பதே விடையாக அமையும் போது வாழ்க்கை நெறியும் அவள் ஈடுபட்டுள்ள தொழிலும் கடைத்தெருவில் வந்தவையாகவே அமைந்துள்ளது.

ஈடு என்ற மற்றொரு கதையில் மகனின், அகால மரணத்திற்கு விலைபேசும் தந்தையும் அதில் பங்கு கேட்கும் அரசு அலுவலர்கள், அரசியல் வாதிகள் என்று எல்லாமே பணம் என்ற அடித்தளத்தில் கடைத்தெருவில் நிகழும் வாணிபக் காட்சிகளாகிவிட்டன.

பறிமுதல் கதையிலும் பொருள் சார்ந்த மதிப்பீட்டிற்கே சுப்புக்குட்டன் தள்ளப்படுகின்றார். பொருளே மதிப்பீடாக மாறும் போது வாழ்வின் மேன்மைகள் மௌனமாகிவிடுகின்றன. வாழ்க்கையை மாற்றுவது என்ற நகர்தல் தன்மையாவும் வணிகத்தளத்தையே மீண்டும் பதிவு செய்துள்ளார். காளை என்ற கதையில் அப்பளக் கடைக் கோபால் பட்டரின் வாழ்க்கை, அவர்தம் குடும்பம் என்கிற வாழ்வியல் நிலையை எடுத்து வைத்துள்ளார். கடையருகே அமைந்துள்ள அவர் வீட்டு நிகழ்வையும் பதிவு செய்துள்ளார். இரு மகள்களின் நிலையையும் கோபால் பட்டரின் வாழ்க்கையையும் தீர்மானிப்பதே அப்பளக் கடைதான். மழைக்காலத்தில் அப்பள வேலை எதுவும் ஓடவில்லை. கடையின் கண்ணாடி அலமாரியில் வெறும் வாழைநாரும், காகிதங்களும் ஞானக்கோவைப் புத்தகமும் தான் இருந்தன. சுட்டுத்திங்க ஒரு பப்படம் வேணுமானா இங்கே இல்லை. ராவும் பகலும் இப்படி சிணுசிணு மழை அழுதா பின்னெ எப்படி? இன்னைக்கு புதன். நாலு நாளாச்சு வெயில் கண்டு. நாளையும் இப்படியே நின்னா பரண் கெட்டி தீ போட்டு

பப்படத்தை காயவைத்து எடுக்க வேண்டியது தான் வரும் என்று சிவன் பிள்ளையிடம் பட்டர் கூறும் கூற்று வியாபாரத்தன்மை கொண்டது.

கோமதி என்ற கதை பசுமாட்டின் கதை. கோட்டை நகரில் பேருந்து நிலையம், கடைத்தெருக்கள், மேம்பாலம் என்று களங்கள் அமைந்தாலும் கோமதிக்குக் கடைத்தெருக்களே முதன்மையான தங்குமிடமாக அமைந்து விடுகிறது. கோமதி கடைத்தெருவில் வாய்க்கு வந்ததையெல்லாம் தின்று வைத்தாள். குப்பைக் காகிதங்கள், எச்சில் இலைகள், தினத்தாள்கள், கலர் சஞ்சிகைள் எல்லாம் திண்பாள் என்பது அவளின் அன்றாட நிகழ்வு. சில நேரங்களில் நடந்துவரும் மனிதர்களுக்கு இடையூறாக இருப்பதும் உண்டு. வாகனங்களுக்கு இடையூறாக நிற்பதும் உண்டு. அப்போதெல்லாம் உதையும் அடியும் உடம்பில் படுவதுண்டு. அவற்றையெல்லாம் ஒருபொருட்டாக எண்ணுவதுமில்லை. போலீஸ், நகராட்சி ஊழியர்கள் தேடிவந்தால் காணாமல் போவதும் உண்டு. சிலநாள் கழித்துத் திரும்பவும் வந்து அதே கடைத்தெரு இடத்தில் அசைபோட்டுக்கொண்டு நிற்கும். அதன் வாழ்க்கை முழுவதும் கடைத்தெரு வாசமாகவே நிலைத்துவிடும்போது அதன் இறுதி வாழ்வும் அங்கேயே முடிவாகக் காட்டியுள்ளார். மனிதர்களுக்கான வாழ்வியல் களமாக அமையும் கடைத்தெருவே பிற உயிரினங்களுக்கும் களமாக அமையும் நெறியை இக்கதையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

ஆ. மாதவன் கதைகளில் கதைகளுக்குரிய அனுபவத்தளமாக அமைவது வாணிபத்தளங்களேயாகும். வாழ்க்கையின் எந்த ஒரு நிகழ்வும் பொருள், பணம் சார்ந்த நிலைகளும், உழைப்பு, ஊதியம் சார்ந்த போக்குகளும் வாணிபத் தொடர்புடையனவாகவே அமைவதால் கடை, கடைத்தெரு நிகழ்வுகளின் அனுபவத் தளங்களையே பெரிதும் காட்சிப்படுத்திக் கதையமைத்துள்ளமையால் ஆ.மாதவன் எண்ணத்தக்கவராகின்றார்.

# பதிற்றுப்பத்து காட்டும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

*முனைவர் ஜோ. பிரின்ஸ்*
தமிழ்ப் பேராசிரியர்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவான். தாய் வேளாவிக் கோமான் பதுமன் மகள் ஆவாள். இவன் செங்குட்டுவனுக்கு இளையவன் ஆவான். பதிற்றுப்பத்து ஆறாம் பத்தில் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற்புலவர் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அதற்காக அப்புலவர்களைச் சிறப்பித்து அவன் பரிசில்கள் வழங்கினான். அவர் நகைசெய்து போட்டுக்கொள்ள ஒன்பது காநிறையுள்ள பொன் கொடுத்தான். செலவுக்காக நூறாயிரம் காணம் பணம் கொடுத்தான். அவற்றிற்கு மேலாகத் தன் பக்கத்தில் அமர இருக்கை அளித்து பெருமைப்படுத்தினான்.(பதிற்.பதி.6)

## சிறப்புப் பெயர்கள்

வானவரம்பன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (பதிற்.பதி. 6:11) என்பன இவனது சிறப்புப் பெயர்களாகும்.

திருடிக் கொள்ளப்பட்டுத் தண்டகாரண்யத்தே போன தனக்குரிய மலையாடுகளைத் திரும்பவும் மீட்டுத் தொண்டிக்குக் கொண்டு வந்தவன். தன்னைப் போற்றிய பார்ப்பனர்க்குக் கபிலை நிறப் பசுவையும் குடநாட்டுப் பகுதியின் ஓர் ஊரையும் தானமாகத் தந்தவன். வானவரம்பன் என இனிதாகப் புகழோடும் விளங்கியவன். அப்பெயரை மேலும் விளக்கமுறச் செய்வான் போலத் தனக்கு உட்படாதவரான மழவரைப் போரிலே வெற்றி கொண்டு அவர் வன்மையைக் குன்றச் செய்தவன். தன்னைப் பகைத்துப் படையொடும் வந்த பிற மன்னர்களைத் தோற்று ஓடச் செய்தவன். குழவியைப் பேணிக்கொள்ளும் தாயைப் போலத் தன் குடிமக்களைப் பாதுகாத்தவன் இந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆவான்.(பதிற்.பதி.2-10).

## ஆட்சி எல்லை

பயன்படுத்த முடியாமல் அழியும் செல்வவளம் மிக்க நகரம் பந்தர் (பதி.6.55:4) ஆகும். இது கடற்கரைப்பகுதியில் இருந்தது. இக்கடற்கரைப் பகுதி சங்ககாலத்தில் 'கானலம் பெருந்துறை' என்னும் பெயரைப் பெற்றிருந்தது. இப்பெருந்துறை பகுதியையும் அதனை அடுத்திருந்த வயல்வளம் மிக்க நன்னாட்டையும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தொடக்க காலத்தில் ஆண்டு வந்தான். இக்காலத்தில் பந்தர் இவனது தலைநகரமாகக் கூட அமைந்திருக்கக்கூடும்.

தென்னை வளம் மிக்க துறைமுகம் நறவு ஆகும். இது குட்டநாட்டின் வடபால் கொண்கான நாட்டில் இருந்தது. அப்பகுதியில் வாழ்ந்த இனத்தவரோடு இவன் மகிழ்ந்து வாழ்ந்து வந்தான் (பதி.6.60:10-12) கொண்கானநாடு முல்லைவளம் மிக்க நாடு ஆகும். அந்நாட்டு மக்கள் பின்புலத்தை உழுது விளையும் கதிர்மணிகளைப் பெற்று வாழ்ந்து வந்தனர். அந்நாட்டு மக்கள் இவனது தலைமையை விரும்பி ஏற்றனர்.

இவனது ஆட்சிகாலம் முழுவதும் நாடு காவல் பணியாய் அமைந்திருந்தது. இவன் தன்னை அண்டி வாழ்ந்த மழநாட்டுக் குடிமக்களுக்குக் கவசம் போல் அமைந்து அவர்களைக் காத்து வந்தான் (மழவர் மெய்ம்மறை. (பதி.6.55:8) தன் ஆட்சியை விருப்பாத மழவர்களை இவன் வென்று அவர்களின் தொகை குறையுமாறு செய்தான்.

மழவர்களுக்குக் கவசம்போல் விளங்கியது போலவே இவன் குதிரைமலைப் பகுதியிலிருந்த வில்லோர் குடிமக்களுக்கும் பாதுகாவலனாய் விளங்கினான். (வில்லோர் மெய்ம்மறை (பதி.6.59:9)

## போர்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன் முன்னோர் வென்ற நாடுகளையெல்லாம் தானும் வென்றான் (பதி.6.53:12-13) வேந்தர்களது தார்ப்படையை அழித்து மலைநாட்டைக் கைப்பற்றினான் (பதி.6.55:17-18). பகைவர்கள் இவனுக்குத் திரை தந்தபோது அதனை ஏற்றுக்கொண்டு அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டு மீண்டான் (பதி.6.53:10 -13)

**படைச்செருக்கு**

இவனது வெற்றிகளுக்கு உறுதுணையாய் அமைந்தவை. போர்த் திறமும் இவனது படையின் ஆற்றலுமாகும். நாகப்பாம்பை இடி கொல்வதுபோலப் பகைவர்களைக் கொல்லும் ஆற்றல் மிக்கவன் இவனாவான். (பதி.6.51:26-28).

தும்பைப்'பூ' ச்சூடித் தேரில் ஏறிவந்து இவனது நாட்டைத் தாக்கிய பகைவரின் தார்ப்படையை இவர்கள் போந்தைப் 'பூ'ச் சூடி எதிர்த்து வென்று கொன்றனர் (பதி.6.51:31) இவனது படைகள் பகைவரின் யானைகளைக் கண்டு நிலைகொள்ளாது பாய்ந்தன (பதி.6.54:16-17).

**கொடைத்தன்மை**

தன்னைச் சேர்ந்தாரையெல்லாம் பாதுகாக்கும் கோட்டை அரணாக இவன். விளங்கினான் (பதி.6.59:10) இரவலர்கள் யாரும் இவனை நாடி வராத காலத்தில் இவன்தானே சென்று தேடிப்பிடித்துத் தேரில் ஏற்றிக்கொண்டு வந்த அவர்களுக்குப் பரிசில்கள் நல்கினான் (பதி.6.55:10-11).

இரவலர்களுக்குப் பரிசில் நல்கியதோடு அமையாது அவர்கள் வாழ்ந்த ஊர்களையே வளம் பெருகச் செய்தான் (இரவல் மாக்கள் சிறுகுடி பெருக. உலகம் தாங்கிய மேம்படு கற்பின் பதி.6.56:7-8)

**பண்புநலன்**

இவனது கை இரப்போர்க்குக் கொடுப்பதற்காகக் குவிந்ததேயன்றி எதையும் விரும்பி மலர்ந்ததில்லை (பதி.6.52: 11-12) பிறரை விரும்பி அவர்களுக்கு நலம் பயப்பனவற்றைச் செய்யும் நெஞ்சப்பாங்கு உடையவன்.

*"நாடல்சான்ற நயனுடைய நெஞ்சின்" (பதிற்.பதி.6:10)*

**சிறப்புச் செயல்கள்**

இவன் ஆடல்கலையில் தேர்ச்சிமிக்கவன். விழாக்காலத்தில் விளக்கொளியில் கோடிய முழவு முழங்க மைந்தரும் மகளிரும்

தழுவிக்கொண்டு ஆடும் அணங்கை ஆட்டத்தில் இவனும் தலைக்கை தந்து (தலைமையிடம் கொண்டு) நெளிந்து ஆடினான். (பதி.6.5:14) வெற்றிக்குப்பின் போர்க்களத்தின் ஆடும் துணங்கை ஆட்டத்திலும் ஈடுபட்டுத் தன் மனைவியையும் மறந்து நீண்டநாள் வெளியில் தங்கிவிட்டதும் உண்டு. (பதி.6.51:11-15 ) இவன் தனது நாட்டைக் குழந்தையைக் காக்கும் தாய்போலக் காத்து வந்தான் (பதிற்.பதி.6:2-10) நன்னடத்தைக்குப் பெருமதிப்பளித்துச் சான்றோர்களைப் பேணி வந்தான். (பதி.6.55:1).

## உருவத்தோற்றம்

ஒளிவீசும் அணிகலன்களை இவன் அணிந்திருந்தான். போர்ச்சின்னமாக அணியும் உழிஞைப் பூவையும், பொன்னால் செய்து அணிந்துகொள்ளும் அணிவேட்கையின் (பதி.6.56:5) வேங்கையை வென்ற களிற்றின்மீது ஏறிக்கொண்டு இவன் சென்றது உண்டு (பதி .6.53:18-21)

## மனைவி

இவன் மனைவி சிறந்த அறிவுநலம் வாய்க்கப் பெற்றவள் (பதி.6.55.:1) -ஆன்றோள்கணவ') இவன் ஆட்டத்தில் ஈடுபட்டுப் பல நாள் வெளியில் தங்கியிருந்தபோது அவனைப் பிரிந்து தனிமையில் இவள் வாழ்ந்து வர நேர்ந்தது. அவன் பல நாள் கழித்து மீண்டும் இவளிடம் வந்தபோது இவள் ஊடினாள் (பதி.6.52:14-24). (பிற சேர வேந்தரின் மனைவியைப் போல ஆறிய கற்புடையவள் அல்லல்;) கணவனை ஊடித்திருத்தும் சீரிய கற்பினள். இவளேயன்றி வேறு மனைவியரும் இவனுக்கு இருந்தனர்.

# சொல்லாமல் சொல்கிறார்

*ஆறுவிரல் ஐம்பொறி*

தொல்காப்பியர், இளங்கோவடிகள் போன்று ஒரு நூல் எழுதிப் புகழ் பெற்றவர்களுள் திருவள்ளுவர் தலைசிறந்த அறிஞர் ஆவார். இவர் இயற்றிய திருக்குறளுக்கு நிகரான நூல் இல்லை. அதற்கு நிகர் அஃது ஒன்றே.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்றும் ஒரு குறளில் அமைந்துள்ள குறட்பாக்கள் இரண்டு மட்டுமே உள்ளன.

1. *அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்*
   *திறம்தெரிந்து தேறப் படும்* - குறள் - 501

2. *அறம்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
   *தீதின்றி வந்த பொருள்.* - குறள் - 754

அறத்தின் இன்றியமையாமையை உணர்த்தவே இவ்விரண்டு குறட்பாக்களிலும் திருவுள்ளுவர் அறத்தை முன் வைத்துள்ளார். எல்லோரும் இயலாதோருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தை வலியுறுத்தவே அறத்துப் பாலையும் முன்வைத்துள்ளார். இயலாதோருக்குக் கொடு. அவர் முகத்தில் உள்ள களிப்பைக் கண்டு களி. இதனையே திருவள்ளுவர் 'அறத்தான் வருவதே இன்பம்' என்று ஏகாரம் கொடுத்து வலியுறுத்துகிறார். ஈத்துவக்கும் இன்பம் தவிர மற்ற இன்பமெல்லாம் இன்பமல்ல என்பதை 'புறத்த புகழும் இல' என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

திருக்குறளில் கோடி என்ற எண்ணுப் பெயரை நோக்குவோம். திருவள்ளுவர் அறத்துப் பாலில் இரண்டு குறட்பாக்களில் மட்டுமே கோடி என்ற எண்ணுப் பெயரைப் பயன்படுத்தி உள்ளார்.

1. *ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப*
   *கோடியும் அல்ல பல* - குறள் - 337

2. *வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
   *தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது* - குறள் - 377

திருவள்ளுவர் பொருட்பாலில் ஆறு குறட்பாக்களில் கோடி என்ற எண்ணுப் பெயரைப் பயன்படுத்தி உள்ளார்.

1. *பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்*
   *எழுபது கோடி யுறும்.   குறள் - 639*

2. *பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்*
   *ஏதின்மை கோடி யுறும்.   குறள் - 816*

3. *நகைவகையர் ஆகிய நட்பிற் பகைவரால்*
   *பத்தடுத்த கோடி யுறும். -   குறள் - 817*

4. *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
   *குன்றுவ செய்தல் இலர்.   - குறள் - 954*

5. *கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய*
   *கோடி உண்டாயினும் இல். - குறள் - 1005*

6. *கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்*
   *இரவாமை கோடி யுறும்.   - குறள் - 1061*

அறத்தில் இரண்டு கோடி. பொருளில் ஆறு கோடி. ஏன்? ஆறுக்கு இரண்டு என்பது பாதியை விட சற்று குறைவு. ஈட்டிய பொருளில் பாதியை விட சற்று குறைவாக அறம் செய்யலாம். என்று திருவள்ளுவர் சொல்லாமல் சொல்கிறார்.

திருக்குறளில் உள்ள இயல்களை நோக்குவோம். பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு இயல்கள் அறத்துப் பாலில் உள்ளன. ஆனால் பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், அரணியல், ஊழியல், படையியல், நட்பியல், குடியியல், ஒழிபியல் என எட்டு இயல்கள் உள்ளன. அறத்தில் நான்கு இயல்கள். பொருளிலில் எட்டு இயல்கள் ஏன் ? எட்டில் பாதி நான்கு. ஈட்டிய பொருளில் பாதியை அறம் செய்க என்று திருவள்ளுவர் சொல்லாமல் சொல்கிறார்.

திருக்குறளில் பால்பிரிவுக் குறள் தொகையை நோக்குவோம். அறத்துப் பாலில் 380 குறட்பாக்கள் உள்ளன. ஆனால் பொருட்பாலில் 700 குறட்பாக்கள் உள்ளன. 700க்கு 380 என்பது பாதியைவிடச் சற்று மிகையாகிறது. அறத்தில் 380 பொருளில் 700 ஏன்? ஈட்டிய பொருளில் பாதியைவிட சற்று மிகையாகவும் அறம் செய்யலாம் என்று திருவள்ளுவர் சொல்லாமல் சொல்கிறார்.

எனவே திருவள்ளுவரின் எண்ணப்படி நாம் ஈட்டிய பொருளில் பாதிக்குச் சற்று குறைவாகவும் அறம் செய்யலாம். சரிபாதியையும் அறம் செய்யலாம். சூழ்நிலைக்கு ஏற்றவாறு அறம் செய்து இயலாதோருக்கு இன்பம் அளித்து நாமும் அடைவோமாக.

# விட்டிசை இலக்கணத்தில் பத்தாமை

*முனைவர் க. பரமேஸ்வரன்*
மதுரை

பத்தாமை என்பது பத்து வகையான ஆமைகள் = பத்து + ஆமை, ஆமை = ஆ+மை. ஆம்+ ஐ -ஆ என்றால் உடன்பாடு. மை என்றால் தீவினை. ஆம் என்றால் ஆகும். ஐ என்றால் பெருநோய் என்று பொருள்படும். அதாவது பத்துவகையான பெரு நோய்களாகுமென்றோ அல்லது பத்துவகையான தீவினை உடன்பாடென்றோ எடுத்துக்கொள்ளலாம். அவை பொறாமை, அழியாமை, நிகழாமை வராமை, விழாமை, பொறாமை, தூங்காமை, சேராமை, சொல்லாமை, இல்லாமை என்பனவாகும்.

## 1. பொறாமை

*அக்கமையால் அக்கமைக்கு அக்கமையே அக்கமைதான்*
*அக்கமும் அக்கமம்தான் அக்கமுன்றி அக்கப்பாடு*
*அக்கடத்தில் அக்கடிக்கும் அக்கடித்த அக்கடியும்*
*அக்கமைக்கு அக்கசாலை அக்கரையாம் அக்கமமும்*
*அக்கடவிட்டு அக்கமையே அக்களிப்பு அக்கயமே.*

### பொறாமை

வலிமையின்மையால் வருவது இயலாமையாகும். இயலாமையால் வருவது பொறுமையின்மையாகும். பொறுமையின்மையால் வருவது பொறாமையாகும். அந்த பொறாமைக்குக் காரணம் இயலாமை தான். கண்கள் கூட வருத்தமுற்று கண்ணீரைத் தருகின்ற மோசமான நிலைமைக்கு உட்படுகின்றன. அந்த இடத்தில் சஞ்சலம் வருகின்றன. அதனால் இடைஞ்சல் வருகின்றன. அந்த இடைஞ்சலினால் வருத்தமும் வருகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணமான பொறாமையினை அணிகலனாய் நினைத்து, அணிகலன் செய்யுமிடத்தில் உருவாக்குவது

குற்றமாகும். ஆகவே பொறாமையை எவ்விடத்திலும் இருக்காது விரட்டிவிட்டால், மனம் மகிழ்வதோடு அழிவில்லாத நிலையைத் தரும்.

## அருஞ்சொற்பொருள்

அக்கமையால் - வலிமையின்மையால், அக்கமைக்கு-இயலாமைக்கு, அக்கமையே-இயலாமையாலே, அக்கமம்தான்-பொறுமையின்மை, அக்கமும் -பொறாமையும், அக்கப்பாடு-மோசமான, அக்கடத்தில்-அவ்விடத்தில், அக்கடிக்கும் - வருத்தம், அக்கடித்தல்-இடைஞ்சல், அக்கடி-அலைவு, அக்கசாலை-அணிகலன் செய்யுமிடம், அக்கரை-கருத்து, அக்கடவிட்டு-அவ்விடம்விட்டு, அக்களிப்பு-மனமகிழ்ச்சி, அக்கயமே-அழிவின்மையே.

## 2. அழியாமை

*அக்காம் அக்காமரின் அக்காமாகும் அக்காம்*
*அக்காம் அக்காமே அக்காம் அக்காமாம்*
*அக்கா மேலே அக்காமுட்டி அக்காம்பு அக்காம்வேறு*
*அக்காமரின் அக்காம் வந்து அக்காம் அக்கமாயின்*
*அக்காமே அக்காமாம் அக்காமும் அக்காமே.*

## அழியாமை

எழுத்தாளரின் எழுத்து அழியாததாகும். அவ்வெழுத்துச் சொற்கள் அழியாததாகும். ஆகாயமும் அழியாததாகும். அந்த ஆகாயம் அழியாதது போல அந்தச் சிறந்த சொற்கள் அழியாமையாய் இருக்கவேண்டும். வெள்ளெருக்குச் செடியும் அருகில் வளர்ந்த மாமரமும் வித்தியாசப்படும். மாமரம் பருத்த கிளைகளைக் கொண்டுள்ளது. வெள்ளெருக்கு சிறிய கிளையின் இலைக்காம்புகளைக் கொண்டுள்ளது. எழுத்தாளரால் படைக்கப்பட்ட அசைச் சொல்லும், எழுத்தும், ஆகாயமும் அழியாதது போல, என்றென்றும் அழியாது நிலைத்து நிற்கும். அழிவின்மையும் ஒரு நித்தியானந்தனாகும். அசை, சொல் கொண்டு படைக்கப்பட்ட எழுத்துமூலமே படைப்பாளிகளுக்கு அழிவின்மையைத் தருகின்றது.

## அருஞ்சொற்பொருள்

அக்காம் - அழியாதது, அக்காமரின் -எழுத்தாளரின், அக்காமாகும்-எழுத்தாகும், அக்காம்-சொற்கள், அக்காமாம்-ஆகாயமே

அக்காம்-சொற்கள், அக்காமாம் - ஆகாயமே அக்காம் - அழியாதது, அக்காமாம் - வெள்ளெருக்குச் செடியாம், முட்டி செடிவகை அக்காமேலே - மாமரத்தின்மேலே, அக்காம்பு - மாமரத்தின் இலை முதலியவற்றின் காம்பு. அக்காம் வேறு- மாமரம் மற்றும் வெள்ளெருக்கு என்று வேற்றுமைப்படுதல், அக்காம் வந்து - அசைச்சொல்வந்து, அக்காம் - எழுத்தாம், அக்காமாயின் - ஆகாயமானால், அக்காமே - நித்யானந்தாமே, அக்காமாம் - எழுத்தும், அக்காமமும் - சொல்லும், அக்காமே - அழிவின்மையே.

## 3. நிகழாமை

*உக்காகுடி வுக்காஇக்கு உக்குதலாய் இக்குவுக்கா*
*உக்கிடரும் உக்கமிக்கு உக்கிரம் உக்கிரமிக்கு*
*இக்காவந்து உக்குஇக்கு உக்குபோக்க இக்குவுக்கல்*
*இக்கிரிக்குள் உக்கமிக்கு உக்கலோடு உக்கலீக்க*
*இக்காவுக்கா உக்கிரம் ஏக்கம் நீக்கி இக்குவெல்க.*

**விளக்கம்**

கள் குடிப்பது உடலுக்கு ஆபத்து. கொட்டாவி விடுவது ஊக்கத்திற்கு ஆபத்து. சிலந்தி பூச்சிக்கு தீ ஆபத்து. கொடுமை தரும் கோபம் ஆபத்து. கொட்டாவி வந்தால் முயற்சிக்கும், உற்சாகத்திற்கும் ஆபத்து. பசுமாடுகள் வயல்களில் புகுந்தால் பயிர்களுக்கு ஆபத்து. ஆபத்து விளைவிக்கும் கள், கொட்டாவி, கோபம், கொடுமை (தீமை) போன்றவைகளை அழித்துவிட்டால் வெற்றி என்பது நிச்சயமாகும்.

## அருஞ்சொற்பொருள்

உக்கிரம்-கொடுமை, உக்கிரமிக்கு-கோபம் ஆபத்து, இக்காவந்து-கொட்டாவிவந்து உக்குஇக்கு - ஊக்கத்திற்கும் ஆபத்து, உக்குபோக்க-முயற்சியையும் ஊக்கத்தினையையும் போக்க, இக்குவுக்கல்-மிகுதியாக ஆபத்திற்கு தடைவிதிக்கவேண்டும், இக்கிரிக்குள்-பயிர்ச் செடிகளுக்குள், உக்கமிக்கு-மாடுபுகுந்தால் ஆபத்து, உக்கலோடு உக்கல்-மிகுதியோடு மிகுதியாக, ஈக்க-தருக, ஏக்கம் நீக்கி-கவலை-/ பயம் நீக்கி, இக்குவெல்க-ஆபத்தை நீக்கி வெற்றிகொள்க.

## 4. வராமை

*நெஞ்சகத்தில் வஞ்சம்வரா மிஞ்சும் நீரற மஞ்சும்வரா*
*நஞ்சையிலே புஞ்சைவரா அஞ்சு சின்ற தஞ்சுவரா*
*வெஞ்சினமாய் கெஞ்சவரா தீஞ்சுவைக்கு நஞ்சுவரா*
*சஞ்சலமே துஞ்சுதலும் மஞ்சமதில் மிஞ்சல்வரா.*

### விளக்கம்

மனதில் வஞ்சனைகள் வரக்கூடாது. மழைதராமல் மேகம் வரக்கூடாது. நெல்விளையும் நஞ்சை நிலத்தில் வறட்சிப் பயிர்களைப் பயிரிடக்கூடாது. அஞ்சிநடுங்கி பயந்து ஓடிப்போய் தஞ்சம் புகுகின்ற நிலைவரக்கூடாது. கடுமையான கோபத்தினால் யாருக்கும் கெஞ்சுகின்ற நிலையை உருவாக்கக்கூடாது. இனிமையான சுவையில் விஷத்தைக் கலக்ககூடாது. அதிகமாய்ப் படுத்துத் தூங்கி சஞ்சலத்திற்கு இடம் தரக்கூடாது.

## அருஞ்சொற்பொருள்

நெஞ்சகம் - உள்மனம், வஞ்சம் - கபடம், மிஞ்சும்நீர் - மிகுதியாகும் மழைநீர், மஞ்சம் - மேகம். நஞ்சை - நெல்விளையும் நஞ்சைநிலம், புஞ்சை - வறட்சிப்பயிர்கள் வளரும் புஞ்சை நிலம், அஞ்சுதல் - பயப்படல், தஞ்சம்-அடைக்கலம், வெஞ்சினம்-கோபம், கெஞ்சுதல்-கெஞ்ச. தீஞ்சுவை - இனிமையான சுவை, நஞ்சுவிஷம், சஞ்சலம் - துன்பம், துஞ்சுதல் - தூக்கம், மஞ்சம்-கட்டில், மிஞ்சல்-மீறுதல்.

## 5. விழாமை

*சக்கிரபாதமும் எக்கல்வதியிங்கி கரைசேரா*
*சக்கிரபந்துவும் சக்கிரவேதிநியில் புடைசூழா*
*சக்கிராடியின் சக்குவினிலே சக்கிரமண்டலி விடையாகா*
*சக்கிரமெல்லாம் சக்கிரவத்தம் சக்கிரிக்கு சக்கியமே*
*சக்கியமும் சக்கியமாய் சக்கியமே சக்கிரிக்கே.*

**விளக்கம்**

யானையானது எக்காலாலடிக்கப்பட்ட வதியில் இறங்கிவிட்டால் தப்பித்துக் கரைசேர முடியாது. சூரியன் இரவில் வந்து வெளிச்சத்தைத் தராது. பாம்பாட்டியின் கண்களில் சிக்கிய பாம்பு தப்பிக்கமுடியாது. சுழல்கின்ற பூமியில் திசையெல்லாம், தலைவனானவனுக்குச் சிநேகம் அவசியம். தன்னைக் குழிப்பறிக்காத அன்புகொண்ட நட்பே சிறந்தது.

## அருஞ்சொற்பொருள்

சக்கிரபாதம்-யானை, எக்கல்வதி- எக்கலால் அடிக்கப்பட்ட வதி, சக்கிரபந்து-சூரியன், சக்கிரவேதிநி-இரவு, புடை-பக்கம், சக்கிராடி-பாம்பாட்டி, சக்கு-கண், சக்கிரமண்டலி-பாம்பு, விடையாகா-விடுதல்முடியாது, சக்கிரமெல்லாம்-திசையெல்லாம், சக்கிராவத்தம்-சுழற்றுதல், சக்கிரி-தலைவன், சக்கியமே-பாதுகாக்கும் கூட்டமே, சக்கியமாய்-அன்புகொண்டதாய், சக்கியமே-நட்பே, சக்கிரிக்கே-தலைவனுக்கே.

## 6. பெறாமை

*கோகிளம்வித்து கோகிலம்தரும் கோகிலம்தந்தது*
*கொக்களஞ்சமோங்கும்*

*கோகுல மங்கைக்கு கோகிலம் கைகளே*
*கோகுலம் சொல்லுமே கோகில சகினமே*
*கோகுலம்பாடுமே கோகுல ராகமே*
*கோகுலம் மனிதனே கோகிலம் பெறாதே*

**விளக்கம்**

இலந்தை விதை முளைத்து இலந்தை மரத்தைத் தரும். கலப்பை நிலத்தில் உழுதால் தான் முற்றம் செழிக்கும். அனைவரும் பசியின்றி வாழமுடியும். இலக்கியத்தில், அழகிய மங்கையர்களின் கைகளிலுள்ள உலக்கையின் மூலம் சுன்னம் இடிப்பது ஒரு கலையென்று அறியமுடிகிறது. பல்லியானது, நல்ல சகுனம் சொல்லும். குயில்பாடி இனிமையான ராகம் தருகிறது. அழகிய மனிதனே நீ குரங்கின் குணங்களைப் பெற்றுவிடக்கூடாது.

## அருஞ்சொற்பொருள்

கோகிளம்வித்து-இலந்தைமரத்தின் விதை, கோகிலம் தரும்-இலந்தை மரத்தை உருவாக்கும், கோகிலம்-கலப்பை கொக்களஞ்சியம்-நெற்களஞ்சியம், கோகுலமங்கை-அழகியமங்கை, கோகிலம்-உலக்கை, கோகுலம் சொல்லும் -பல்லிசொல்லும், சகினமே-சகுனமே கோகிலம்பாடும்-குயில்பாடும், கோகுலம் மனிதனே - அழகிய மனிதனே, கோகிலம்-குரங்கு.

### 7. தூங்காமை

*தூக்கம் தூக்குதல் தூக்கசேகரம் தேக்குதூக்குதல் தூக்கறி*
*தூ க்கிரிகையில் தோக்குவானாலும் தூ க்கம்தொத்தினால் தூ க்கிதம்*
*தூ க்கனாந்தொக்கத்தில் தேக்கம் தேக்குதல் தூ க்கம் குருவியால்*
*தூக்கனம் தூக்குக்கு தூக்கம் தொக்குத்தும்*
*தூக்கத்தை தூக்குதல் நீக்கிடும் தூக்கமே.*

## விளக்கம்

நித்திரையை ஆராய்ந்தால் மலையைவிடப் பெரியது. தேக்கு மரத்தை ஆராய்ந்தால் பயன்படக்கூடியது, பயனற்றது என அறிந்துவிட முடியும். காவலன் கைகளிலுள்ள துப்பாக்கியானாலும் தூக்கம் சேர்ந்துவிட்டால் வருந்துகின்ற வகையில் விபரீதம் கட்டப்பட்டது, எனினும் குருவி தூங்கிவிட்டால் மழைநீர் தேங்கி கூட்டிற்குள் ஆபத்து விளைவிக்கும், கையிலுள்ள உளிகூட ஆசாரி என்னும் சிற்பி தூங்கிவிட்டால் கையைப் பதம் பார்த்துவிடும். ஆராய்ந்து பார்த்தால் தூக்கத்தை நீக்குதலே சிறந்தது.

## அருஞ்சொற்பொருள்

தூ க்கம்-உறக்கம், தூக்குதல்-ஆராய்தல், தூக்கசேகரம் - மலை தேக்கு - தேக்குமரம், தூக்கறி - உதவாது என்பதை உணர்தல், தூக்கிரி - காவலாள், தோக்குவானாலும் - துப்பாக்கியானாலும், தொத்தினால்-சேர்ந்தால், தேக்கம்-தேங்கும் நிலை நீர், தேக்குதல்-நிறைதல், குருவி-தூ க்கணாங்குருவி, தூ க்கணம்-உளி, தூக்குக்கு-ஆசாரி என்னும் சிற்பிக்கு தொக்குத்தும் - உடலைத் தைக்கும்.

## 8. சேராமை

*சிக்காரத்தில் சிக்கவைக்கும் தக்கவரின் தக்கார்சேரா*
*சிக்குப்பாடு சிக்குதலில் சிக்கிரமும் சுக்கம் சேரா*
*சிக்குண்ணல் சிக்கெனவு சிக்கமான சிக்கம்சேரா*
*சிக்கலிதல் சிக்கியிலா தொக்கடை தொக்கார் சேரா*

### சேராமை -விளக்கம்

அழவைத்துத் தன்னை மாட்டிவிட்டு கூத்துப்பார்க்கும் உறவினரோடு சேரவேண்டாம். முயற்சிக்கு தடைசெய்து கோபத்தைத் தூண்டும் மனிதரோடும், களவு செய்பவரோடும் சேரவேண்டாம். இரக்கமில்லாமல் தரித்திரமாய் மாற்ற நினைக்கும் தோழர்களுடன் சேரவேண்டாம்.

### அருஞ்சொற்பொருள்

சிக்காரத்தில்-அழுகைகொள்ளும்படி, சிக்கவைக்கும்-சிக்குதலாய் அகப்படுத்தும், தக்கவரின் - தக்கார் தகுதியுடை உறவினரோடு, சிக்குபாடு - தடை, சிக்குதலில் - அகப்படுதலில், சிக்கிரமும் - கோபமும், சுக்கம்சேரா - களவுசெய்பவரோடு சேர வேண்டாம். சிக்குண்ணல் - சிக்குப்படுதல், சிக்கெனவு - உறுதி, சிக்கமான சிக்கம் சேரா - வேலையைக் கெடுக்கும் கயவரோடு சேரவேண்டாம். சிக்குதலில் - ஈரம், சிக்கியிலா - நாண - மில்லாத, தொக்கடை - தரித்திரம், தொக்கார் சேரா - தோழருடன் சேர வேண்டாம்.

## 9. சொல்லாமை

*பக்கசமன் பக்கணமே பக்ககனின் பக்கம் சொல்லா*
*பக்கன்மீது பக்கசரம் பக்கனிடம் புக்கில் சொல்லா*
*பக்கவென்று பக்கத்தாரை பக்கமாக பக்கர்சொல்லா*
*பக்கறையும் புக்கசனாய் புக்தம கேட்டு பொக்கம் சொல்லா*

### விளக்கம்

சந்திரன் ஒரு ஊருக்கு மட்டும்தான் வெளிச்சம் தருகிறது என்று உன் கூட்டாளிகளிடம் பேசாதே. பூனையின் மீது யானை ஏறி நின்றாலும் பூனையின் உடல் தாங்கும் என்று வெளியில் பேசாதே. அயலவர் தன் இனமென்றாலும் புறக்கதவின் மூலம் வீட்டிற்குள் நுழையவிட்டு

சுற்றத்தார் என்று சொல்லிவிடாதே குழப்பிவிடும் சண்டாளனாய் உணவுக்காகப் பொய் சொல்லாதே.

## அருஞ்சொற்பொருள்

பக்கசமன் - சந்திரன், பக்கணம்-ஊர், பக்கன்-கூட்டாளி, பக்கன்-பூனை (பாக்கன்) பக்கசரம்-யானை, புக்கில்-உடல், பக்கல்-இனம், பக்கத்தார்-அயலவர், பக்கம்-புறக்கதவு, பக்கர்-சுற்றத்தார், பக்கறை-குழப்பம், புக்கசன்-சண்டாளன், புக்தம கேட்டு-உணவுகேட்டு, பொக்கம்-பொய்.

## இல்லாமை

*அல்லலையும் அல்லல் செய்தால் அல்லல்கூட அல்லல்படும்*
*தொல்லையையும் தொல்லைசெய்தால் தொல்லைகூட தொல்லைபடும்*
*இல்லையென்று இல்லைசொன்னால் இல்லைகூட இல்லையாகும்*
*எல்லையுண்டு வெல்லநினை வெல்லும் நிலை துள்ளிவரும்.*

## விளக்கம்

துன்பத்திற்குத் துன்பம் செய்தால், அந்தத்துன்பம் கூடத் துன்பப்பட்டு இல்லாமல் ஓடிவிடும். தொல்லைதரும் தொல்லைகளுக்குத் தொல்லைசெய்தால் தொல்லையும் தொல்லைப்பட்டு ஓடிவிடும். இருப்பதைவிட்டு இல்லையென்று மாறாகக் கூறினால் இருப்பது கூட இல்லாமல் ஓடிவிடும். எதற்கும் ஒரு எல்லை இருக்கிறது என்று வெற்றியடைவதற்கு நினைத்தால் வெற்றியின் நிலை தானாக துள்ளிவந்து சேரும்.

## அருஞ்சொற்பொருள்

அல்லல்-துன்பம், தொல்லை-தொல்லை கொடுத்தல்,
அல்லல்படும்-துன்பப்படும், வெல்லும்நிலை-வெற்றியடையும் நிலை.

# கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைகளில் புதுமைகள்

*கோ. கலைச்செல்வன்*
சிதம்பரம்

**முன்னுரை**

கவிதை என்பது வானத்தில் வளம் வரும் கதிர்கள் அன்று. நிலத்தில் வாழும் மனிதர்களின் தணியாத தாகம். தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் தேவைப்படுவதைப் போல வாழ்கையில் ஏற்படும் தாக்கங்களைத் தணிப்பதற்குக் கவிதைகள் தேவைப்படுகின்றன.

இன்றைய கவிஞர்கள் பலர் தம் கவிதைகளில் புதுமைகளைப் பாடி சமுதாயத்திற்குப் புதிய செய்திகளைத் தருகின்றனர்.

*''வார்த்தைகளுக்கு வர்ணமடித்துத் தன்னை இழக்காமல்*
*வாய் பாட்டுகளுள் தன்பாட்டை அடகு வைக்காமல்*
*புதுப்புச் சிகரங்களைத் தேடும் புதிய கவிஞர்''*

என ஆய்வாளர்களால் பாராட்டப்பெற்றவர் கவிப்பேரரசு வைரமுத்து. அவர்தம் கவிதையில் மலிந்து கிடக்கும் புதுமைச் சிந்தனைகளை இக்கட்டுரை ஆய்கின்றது.

வழக்கமான ஒன்றை வேறுபட்ட பாணியில் வித்தியாசமாகச் செய்வது புதுமை எனப்படும்.

**கவிதையில் புதுமை**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதை உலகில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. மரபுக் கவிதைகளை மறுத்துப் ''புதுக்கவிதை'' என்ற புதுமையான கவிதை வளர ஆரம்பித்தது.

''மறுமலர்ச்சிக் கவிதை இயக்கத்தின் முன்னோடியாக விளங்கும் பாரதியே தமிழைப் பொருத்தவரை இன்றைய புதுக்கவிதை இயக்கத்தின் மூல மனிதராகவும் விளங்குகிறார். பாரதியின் வசனக் கவிதைகள் அல்லது உரைநடைக் கவிதைகளின் தோற்றமே புதுக்கவிதை இயக்கத்தின் வித்து'' என்பார் கூற்று இங்கு நினையத்தகும்.

வடிவ அமைப்பில் மாற்றம் பெற்ற புதுக்கவிதைகள் தமிழில் தோன்றுவதற்கு ஆங்கிலத் தாக்கமே அடிப்படை. புதுக்கவிதை இயக்கம்

அமெரிக்கக் கவிஞர் 'வால்ட் விட்மன்' என்பவரால் ஆங்கில இலக்கியத்தில் தோற்றுவிக்கப்பட்டது. அவர் எழுதிய 'புல்லின் இதழ்கள்' என்ற புதுவகைக் கவிதை உலகப் புகழ் பெற்றது. பலவகைக் கண்டனக் கணைகளுக்கும், விமர்சன அம்புகளுக்கும் ஆளாகியும் இக்கவிதை உலகப் புகழ் பெற்றமையால் இதன் வடிவ அமைப்பு ஆங்கிலத்தில் நிலையான இடத்தைப் பெற்றது.

வால்ட் விட்மனைப் பின்பற்றி எஸ்ராபவுண்ட், டி.எஸ். எலியட், எட்வர்டு கார்பெண்டர் போன்றோர் புதுக்கவிதை இயக்கத்தை உருவாக்கினர்; புதுக்கவிதைக்கான கோட்பாடுகளை வகுத்தனர்.

காலத்தின் கட்டாயத்தால் சில மாற்றங்கள் தோன்றுவது இயற்கை. இந்நியதிப்படி மரபுக் கவிதையின் அமைப்பிலும் ஒரு பெருமாற்றம் ஏற்பட்டது. மரபுக் கவிதைகளின் வடிவம், இலக்கணக் கட்டுப்பாடு, பொருள் எளிதில் விளங்காத் தன்மை ஆகியவறைக் கொண்டு சில இளைஞர்களுக்கு அவற்றின் மீது கசப்பும், புதுக்கவிதை மீது விருப்பும் ஏற்படலாயிற்று.

இலக்கண வரம்பற்ற தன்மையே புதுக்கவிதை செல்வாக்குப் பெறக் காரணம் என்று கருதலாம். தீபம் இதழில், சிவம் என்பவர் புதுக்கவிதையின் இலக்கண விளக்கமாகப் பின்வரும் கவிதையை எழுதினார்.

*''கவிதைக் கன்னியின்
காலக்கோலம்
காலக்கன்னியின்
கவிதைக் கோலம்*

*நாரிடைத் தளைபடா
நான் மலர்க் குவியல்
தொடை அடிபந்தம்
தொலைத்த துறவி
இலக்கிய நாகரிகப் பரிணாமம்
இதய வேக வெள்ளை நுரைப்பூக்கள்
இலக்கியப் பாம்பின் தோலுரிப்பு
இயல்பாய்க் கனிந்த புதுமலர்ச்சி*

*உள்ளத் தோட்டத்தின்
உதிரிப் பூக்கள்
உண்மைத் தோட்டத்தின்
மூன்றாம் பிறைகள்*

*புதிதெல்லாம் கவியாய்க் காணும்*
*பொன்மனச் சித்தர்களின்*
*புதுக்கவி மந்திரங்கள்''*

இக்கவிதையில்

1. *காலத்திற்கு ஏற்ற புதிய அமைப்பு*
2. *மரபுக்குள் கட்டுப்படாமை*
3. *உணர்ச்சிகளை அப்பட்டமாக வெளிப்படுத்துதல்*
4. *இலக்கண வரையறை இன்மை*

என்பன புதுக்கவிதையின் இயல்புகளாகச் சுட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

புதுக்கவிதை, இளைஞர்களுக்குள் உறங்கிக் கிடக்கும் உணர்வுகளை உணர்த்துவதால் நிகழ்காலத்தோடு நெருக்கம் உடையதாய் அமைகிறது. ஊர்வலம் என்ற நூலில் கவிஞர் மேத்தா புதுக்கவிதைக்கு இலக்கணம் கூறுகிறார்.

*''இலக்கணச் செங்கோல்*
*யாப்புச் சிம்மாசனம்*
*எதுகைப் பல்லக்கு*
*மோனைத் தேர்கள்*
*தனிமொழிச் சேனை*
*பண்டித பவனி*
*இவை எதுவும்*
*இல்லாத......*
*கருத்துக்கள் தம்மைத்தாமே*
*ஆளக் கற்றுக் கொண்ட*
*புதிய மக்களாட்சி*
*முறையே*
*புதுக்கவிதை''......*

வைரமுத்து மரபுக்கவிதை எழுதி, புதுக்கவிதையின் சிம்மாசனத்தில் அமர்ந்தவர். புதுக்கவிதையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, இலக்கணம் போட்ட உத்தரவுகளை உடைத்துவிட்டுச் சுதந்திர வானத்தில் சொற்கள் கொண்டாடும் சுதந்திர விழாவாகச் சொல்கிறார்.

''புதுக்கவிதை
என்பது
சொற்கள் கொண்டாடும்

*சுதந்திர விழா*
*யாப்பு என்னும் குதிருக்குள்*
*உத்திரவுக்குப் பயந்து உறங்கும்*
*சோம்பேறிச் சொற்களுக்கா*
*நீங்கள்*
*கவிதை என்று கட்டியங்கூறுவீர்!''*

தன்னைப் பாதிக்கும் பிரச்சனைகளை ஓர் இளைஞன் தானே பதிவு செய்வதால் படைப்பாளனாகப் பிரகாசிக்கின்றான். இளைஞர்களிடம் உறங்கிக் கிடக்கும் உணர்வுகளைத் தட்டி எழுப்புகிறது. புதுக்கவிதைக்கு இலக்கணமாக ரத்தினச் சுருக்கமாக வைரமுத்து சொல்கிறார்.

*''மரபுக் கவிதைகள்*
*ஜாதங்கள்!*
*புதுக்கவிதைகளே*
*முகவரிகள்''*

என்று 'கேள்விகளால் ஒரு வேள்வி' என்ற கவிதை நூலில் வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் பாங்கில் புதுக்கவிதைப் பற்றி புதுமையாகக் கூறியுள்ளார்.

## தாலாட்டில் புதுமை

''தாயின் நாவசையில் தாலாட்டு என்னும் நல்முத்து பிறக்கிறது. எனவேதான் தாய்மை, உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு தாலாட்டு'' என்பார் முனைவர் தமிழண்ணல்.

நாட்டுப்புற இயலார் தாலாட்டின் பாடற்பொருளை

1. *குழந்தை பற்றியன*
2. *குழந்தைகளுக்குரிய கருவியைப் பற்றியன*
3. *குழந்தையின் உறவைப் பற்றியன*

என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுப்பர். ஆனால் இக்காலக் கவிஞர்கள் தாலாட்டை ஒரு புதிய கோணத்தில் பாடுகின்றனர். கலைஞர் மு. கருணாநிதி தன் போலிஸ் குழந்தை தாலாட்டில் பின்வருமாறு பாடுகின்றார்.

*''ஆராரோ!...............ஆராரோ! ஆணழகா கண்வளராய்!*
*அஞ்சு பத்த சம்பளத்தில் மிஞ்சுவதில் வளரவந்த*
*அஞ்சுகமே கண்வளராய் !*
*போலீசு வேலைக் கென்று*
*போகின்ற தொப் பனுக்கு*

*புத்திரனாய் வந்துதித்த*
*தரித்திரமே கண்வளராய்!*
*துப்பாக்கி எடுத்துக்கிட்டு*
*போகின்ற நொப்பனிடம்*
*பழம்பாக்கி கேட்டுக்கிட்டு*
*வழிமறிக்கும் கடன்காரன்*
*வருகின்ற காட்சிகளைக்*
*காணமல் கண்வளராய்!*
*நாடாளும் மந்திரிகள்*
*நலியாமல் வாழ்வதற்கு*
*ஓடாகத் தேய்கின்ற*
*அப்பாவின் புத்திரனே!*
*குருவிக் கூடான வீட்டுக்குள்ளே*
*தவழுகின்ற குலவிளக்கே!*
*கொசுக்கடிகக்கு அஞ்சாமல்*
*குவளை மலர்க் கண்வளராய்!*
*காக்கி உடை போட்டுகிட்டு*
*சோப்பு தொப்பி மாட்டிக்கிட்டு*
*நாட்டை காக்கும் வீரனுக்கு*
*உன்னைப்போல*
*நாலுவந்து பிறந்து விட்டால்*
*காவி உடை வேணுமடா!*
*கமண்டலமும் தேவையடா!"*

காக்கிச்சட்டைப் போட்டுக்கொண்டு நட்டைக்காக்கும் வீரனுக்கு உன்னைப் போல் நாலு குழந்தைகள் பிறந்தால் போதும். அவன் காவி உடை போட்டுக்கொண்டு கமண்டலத்தோடு அலையத்தான் நேரிடும் என்று சமூக உணர்வோடு பாடுவது குறிப்பிடத்தக்கது.

## தந்தைக்கு மகன் பாடும் தாலாட்டு

காலம் மாறக் கவிதைகளின் பாடு பொருள்களும் மாறிவருகின்றது. குழந்தைக்கு தாயோ, தந்தையோதான் தாலாட்டுப் பாடுவது இயல்பு அதுதான் இலக்கிய மரபும் கூட. ஆனால் புதுக்கவிதைக் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் இம்மரபை மாற்றியுள்ளனர். ஒரு தந்தைக்கு மகன் தாலாட்டுப் பாடுவது போல எழுதியிருக்கிறார் கவிஞர் மு. மேத்தா.

வாழ்க்கையானது தந்தைக்குச் செய்த வஞ்சத்தை எல்லாம் மறந்து சிறிது நேரம் தூங்கச் சொல்லி தாலாட்டுப் பாடுகின்றான் மகன். எதிர்காலத்தில் தனக்கு ஒளிமயமான வாழ்வு கிட்டினால் அவ்வாழ்வின் பயனை அப்படியே தந்தைக்கு தந்துவிடுவதாக மகன் கூறும் முறையில் அமைந்துள்ளது. அக்கவிதைக் கருத்துக்களை,

*"துருதுருத்த கவலைகளில்*
*தூக்கமில்லா இரவுகளில்*
*தவிதவிக்கும் தந்தையே!*
*நான் தாலாட்டுப் பாடட்டுமா?*
*வாழ்க்கை உனக்குச் செய்த*
*வஞ்சகத்தை நீ மறந்து*
*சிறு பொழுது கண்ணயர்வாய்!*
*நான்*
*தென்றலை அனுப்புகிறேன்*
*விடிந்தால் என் வாழ்வில்*
*வெளிச்சம் வரும்*
*வந்தவுடனே*
*அப்படியே அனுப்புகிறேன்"*

என்ற வரிகளில் காணாலம். ஓசை நயம் சிறந்து விளங்குதோடு ஆழ்ந்த பொருள் நயம் அமைந்திருப்பதையும் காணலாம். தந்தையின் துயரை நீக்குவதாக மகன் பாடுவது புதுமைத் தாலாட்டு என்றே கருதலாம்.

கவிப்பேரரசு வைரமுத்து மூன்று வேறு புதிய கோணங்களில் மூன்று தாலாட்டுகளைத் தருகின்றார்.

1. *ஒரு பள்ளியறைத் தாலாட்டு*
2. *அவசரத் தாலாட்டு*
3. *வித்தியாசமான தாலாட்டு*

## 1. பள்ளியறைத் தாலாட்டு

இத்தலைப்பைப் பார்க்கும் பொழுது குழந்தையே இல்லாமல் தாலாட்டுப் பாடப்படுகிதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் இங்குக் குழந்தையும் இருக்கிறது. கணவனின் குறும்புச் செயலும் இருக்கிறது.

*"தங்க நிலவடிக்க*
*தருமதுரை கண்ணடிக்க*
*மாராப்புப் போட்டுவச்சேன்*
*மகனிருந்து பால்குடிக்க*

*ஒளிச்சுவச்சுப் பாலூட்ட*
*ஒங்க அப்பன் வாலாட்ட*
*என்னப் பெத்த ராசாவே!*
*என்ன சொல்லித் தாலாட்ட"?*

குழந்தைக்குப் பாலூட்டும் பொழுது கணவன் செய்யும் குறும்பைக் கூறியபடி மனைவி உள்ளூர ரசித்து மகிழ்கிறாள் என்பதை புலப்படுத்துகிறார்.

## 2. அவசரத் தாலாட்டு

பெண்கள் அலுவலக வேலைக்குப் போகிறார்கள். வீட்டு வேலையோடு அலுவலகம் என்னும் அடிமைச் சங்கிலியும் பெண்ணை விலங்குபோல் பிணைக்கிறது. வேலைக்குப் போகும் பெண்கள் தாங்கள் பெற்ற குழந்தைகளை வளர்ப்பது அவசரக் கோலமானது. அதைத் தாலாட்டாக வடிக்கிறார் கவிப்பேரரசு.

*"சோலைக்குப் பிறந்தவனே!*
*சுத்தமுள்ள தாமரையே!*
*வேலைக்குப் போகின்றேன்*
*வெண்ணிலவே கண்ணுறங்கு!*

*"அலுவலகம் விட்டு*
*அம்மா வரும் வரைக்கும்*
*கேசட்டில் தாலாட்டு*
*கேட்டபடி கண்ணுறங்கு*

*ஒரு மணிக்கு ஒரு பாடல்*
*ஒலிபரப்பும் வானொலியால்*
*விளம்பரங்கள் மத்திலே*
*விழிசாத்தி நீயுறங்கு"*

என்று அம்மா பாடிவிட்டுச் செல்கிறாள். அலுவலகத்தில் இருந்து தான் திரும்பி வரும் வரைக்கும் ஒலிநாடா தாலாட்டையும், வானொலியின் பாடலையும் கேட்டபடி கண்ணுறங்கச் சொல்லுகிறாள்.

அம்மா, அப்பா இருவரும் வேலைக்குச் சென்று விட்டதாலும், ஆயாவும் தொலைக்காட்சி பார்த்த அசதியில் தூங்கிவிட்டாலும் உனக்கு தூக்கம் ஒன்றுதான் துணை என்று பாடும் தாலாட்டு நெஞ்சைத் தொடுகிறது.

*"ஒன்பது மணியானால்*
*உன் அப்பா சொந்தமில்லை*
*ஒன்பது முப்பதுக்கு*
*உன் அம்மா சொந்தமில்லை*
*ஆயாவும் தொலைக் காட்சி*
*அசதியிலே தூங்கிவிட்டால்*
*தூக்கத்தைத் தவிர*
*துணைக்கு வர யாருமில்லை*
*இருபாதம் நூற்றாண்டில்*
*என் கருவில் வந்தவளே*
*இதுதான் கதி என்று*
*இன்னமுதே கண்ணுறங்கு"*

என்ற கவிதை வேலைக்குச் செல்லும் தம்பதியர் பெற்ற குழந்தைகள் வளர்ப்பார் இன்றி வாடுகின்றனர் என்பதை உணர்த்துகிறது.

வார விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை தாயும் குழந்தையும் முழுமையாகச் சந்தித்து உறவாடும் நாள். அந்த நாள் வரும் வரை பொறுத்திருக்குமாறும் இப்போது உறங்குமாறும் குழந்தையை வேண்டுகிறாள்.

*''தாய் என்று காட்டுதற்கும்*
*தழுவி எடுப்பதற்கும்*
*ஞாயிற்றுக்கிழமை வரும்*
*நல்லவளே கண்ணுறங்கு!''*

வேறு எந்த கவிஞருடைய தாலாட்டிலும் காணமுடியாத கருத்து வளத்தைப் புதுமைப்பாங்கை கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் கவிப்பேரரசு வைரமுத்து.

## 3. வித்தியாசமான தாலாட்டு

குழந்தை உறங்குவதற்காகப் பாடுவது வழக்கமான தாலாட்டு. உறங்குவதற்காகப் பாடாமல் விழிப்புணர்வு பெறுவதற்காகப் பாடுவது வித்தியாசமான தாலாட்டு. இன்றைய வாரிசுகள் பெற்றோரைச் சார்ந்திராமல் தங்கள் சொந்தக் காலிலேயே நிற்கப் பழகிக் கொள்ள வேண்டும். அவர்கள் உழைப்பைக் கொண்டே உயர வேண்டும். வாழ்க்கையை அமைத்துக் கொள்ள தெருவுக்கு வந்தேயாக வேண்டும் என்ற கருத்தை அமைத்துத் தாய் பாடுகிறாள்.

*''தந்தை மகற் காற்றும்*
*சம்பிரதாயச் சடங்குகளின்*
*நீட்டோலையை நீ என்னிடம்*
*நீட்டாதே*
*உனக்குக்*
*கயிறு கிடைத்ததே என்று களி!*
*உனக்கு நான்*
*செல்வம் எதுவும்*
*சேர்த்து வைக்க முடியாது*
*நீ*
*செலவழிப்பதற்கு*
*உன்*
*வேர்வை இருக்கிறது*
*பள்ளிக்கூடத்தில்*
*உன்னை சேர்ப்பது பற்றி*

*நான்*
*சிந்திக்கவில்லை*
*அங்கே*
*உனக்கு நிகழ்வது*
*கட்டாய அறிமுகந்தான்!*
*வாழ்க்கையை வாசிக்க*
*நீ*
*தெருவுக்கு தானே*
*திரும்பி வரவேண்டும்''*

இக்கவிதையில் ஆழ்ந்த பொருள் நயம் இருப்பதையும், இக்கால கல்விமுறை ஒரு அறிமுகந்தானே ஒழிய அது வாழ்க்கைக்குப் பயன்படாது என்று கல்வி முறையைச் சாடுவதையும் காணலாம். இவ்வாறு மூன்று புதுவகையானத் தாலாட்டுகளைக் கவிப்பேரரசு வைரமுத்து தந்திருக்கிறார்.

**வானமும் புதுமையும்**

**நீலவானம்**

நீலவானத்தின் கோலக் காட்சியைக் கவிதையில் வடிக்காத கவிஞர்களே இல்லை எனலாம். இயற்கையின் அழகில் சொக்கி நிற்கும் கவிஞர்கள் வானவெளியை அண்ணாந்து நோக்கித் தமது கற்பனைகளை ஓடவிட்டுள்ளனர்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதையில் வானத்தின் பல்வேறு காட்சிகள் புதுமைக் கற்பனைகளோடு புனைந்துரைக்கப்படுகின்றன. பாவேந்தர் பாரதிதாசன் பஞ்ச பூதங்களில் ஒன்றான வானமே உலகின் வித்து என்கிறார். வானத்தைப் புதுமையாக நோக்கும் கவிதைத் திறத்திற்குப் பின்வரும் பாடலே சான்றாகிவிடுகிறது.

*''விரிந்த வானே! வெளியே – எங்கும்*
*விளைந்த பொருளின் முதலே!*
*திரிந்த காற்றும் புலனும் – மண்ணும்*
*செந்தீ யாவும் தந்தாய்!*
*தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்*
*செறிந்த உலகின் வித்தே!*
*புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்*
*புதுமை! புதுமை! புதுமை!''*

என்று வானத்தை புதுமையாக நோக்குகிறார்.

வானவெளியில் உலாவரும் மேகக் கூட்டங்கள் படைப்பாளிகளுக்குக் கருப்பொருள்களை வழங்கும். விஞ்ஞானிகளுக்கு

விந்தை மிகு அறிவியல் உண்மைகள் நிறைந்த களமாகத் தோன்றும். வைரமுத்து கவிதை 'உள்ளம் வானத் துகில்கள்' என்ற கவிதை வழி வானழகிக்கு மேலாடை கட்டிக் கவிதை மேடையில் உலாவரச் செய்கிறது.

*''முகிலா? இல்லை! முத்தொளி மங்கையர்*
*துகிலா? ஆமாம் சுந்தரக் கவிதைகள்!*

*கருவான் வீதியின் கனவு ரதங்கள்!*
*விரிவான் குளத்தின் வெள்ளிப் படகுகள்!*

*கதிரவன் எரித்த கடுந்தச் சூட்டில்*
*கொதித்தே எரிந்த குளிர்கடல் மீது*
*பூத்துக் கிளம்பிய புகைக் கூட்டங்கள்*
*வாத்து நடையில் வானக் கொக்குகள்!''*

இவ்வாறு வானில் உலவும் வெள்ளிப்படகுகளாகவும், புகைக் கூட்டங்களாகவும், வானக் கொக்குகளாகவும் மேகங்களை உருவகப்படுத்திக் கவிஞர் அழகான வானழகி உடையில்லாமல் வாழ்கிறாளே என்று வருந்திய கடலரசன் அவள் அணிந்த கொள்வதற்காக் கடல் அலையின் ஆவியை நூலாக்கி நெய்து கொடுத்த ஆடை தான் மேகம் என்று பாடுகிறார்.

*''நீள்வான் அழகி நிர்வாணத்தில்*
*வாழ்கிறாள் என்றே வருந்தி, அலையைக்*
*கொய்து கொய்து குளிர்கடல் வேந்தன்*
*நெய்து கொடுத்த நித்தில ஆடைகள்!*
*மோனத் தவத்தில் மூழ்கிக் கிடக்கும்*
*வான மகளின் வடிவுடல் மீதில்*
*இடைதனைத் தேடி ஏங்கி இளைத்த*
*நடைபயில்கின்ற நளினச் சோலைகள்!''*

நளினச் சோலைகளை நடைபயில்வதாகக் கூறியது இல்பொருள் உவமை தோன்ற அமைந்து கவிதைப் பொருளைச் சுவைமிகும்படிச் செய்ததோடு மட்டும் அல்லாமல் வானத்திற்குக் கடல் ஆடை நெய்தும் கொடுத்ததாகப் புதுமையான கற்பனையைப் புனைந்துரைக்கிறார் கவிப்பேரரசு.

விழியைக் காக்கும் இமைபோல் மேகமாகிய மங்கையரை இடியும் மின்னலும் பாதுகாக்கின்றன.

கதிரவன், கடலுடன் கூடியதால் பிறந்த வெள்ளைநிறப் பிள்ளைகளே இந்த மேகக்கூட்டங்கள் தங்களின் பிறப்புக்குத் தந்தையான கதிரவனைத் தேடி வானவீதியில் திசை தெரியாமல் அலைந்து திரியும் வெள்ளைநிறக் கிளிகள் இம்மேகக் கூட்டங்கள். அவை தத்துவம் சொல்லும் சரித்திரக் குறிப்புகள் என்கிறார்.

*''நித்திரை உலகின் நிலையா வாழ்வுத்*
*தத்துவம் சொல்லும் சரித்திரக் குறிப்புகள்!*
*முத்து விதைகளை மூடிவைத் திருக்கும்*
*சித்திரப் பருத்திச் சிறுகுன்றங்கள்!''*

மழை என்னும் முத்து விதைகளைத் தங்களுக்குள் மூடி வைத்திருக்கும் வெண்ணிறப் பருத்திக்குன்றுகளே இந்த வெண் மேகக் கூட்டங்கள்.

பெண்கள் பொய்கையில் குளிப்பதற்காக கரையில் அவிழ்த்த வைத்தவுடன் காற்றில் பறந்த வெண்ணிறத் துளிகளே இந்த மேகக் கூட்டங்கள்.

''மலைமகள் சூடும் மல்லிகைப் பூக்கள்!
விலைசொல இயலா வெள்ளிச் சட்டைகள்!''

மடித்துச் சுருட்ட முடியா வானமெனும் மெத்தையில் வெடித்துச் சிதறிய வெள்ளைப் பஞ்சுகள் என்று ஒரு புதுமையைப் புனைந்துரைக்கின்றார்.

*''கறுத்த மேகங்கள் வானத்தை வளைத்து*
*முற்றுகையிட்டிருந்தன*
*சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தொடர்பு*
*துண்டிக்கப்பட்டிருந்தது*
*பகல் இருட்டை அணியத் தொடங்கியிருந்தது*
*மேகம் சில துளிகளை விட்டுவிட்டுக் கொட்டியது''*

மழை வருவதற்கு முன் வானத்தின் சூழ்நிலையை நயமாக அனைவரும் விரும்பிச் சுவைக்கும் வகையில் வைரமுத்து கூறுகிறார். கருமை கொண்ட மேகக் கூட்டங்கள் வானத்தை வளைத்து முற்றுகையிட்டு இருந்தன. சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு சுத்தமாய்த் துண்டிக்கப்பட்டு இருந்தது. பகல் இருட்டு என்னும் ஆடையை அணியத் தொடங்கியது. மேகம் சில துளிகளை விட்டுவிட்டுக் கொட்டியது என்றும் கூறும்பொழுது மனச்சோம்பலை முறித்து மகிழ்ச்சியூட்டி ஒரு புத்துணர்வை ஏற்படுத்துகிறது.

## அந்தி வானம்

அந்தி நேரத்தின் அழகில் எந்தக் கவிஞருமே தம் இதயத்தைப் பறிகொடுத்து மயங்குவர். சங்கப்பாடல்கள் பல தங்க நிறமான மாலை நேரத்தைப் புனைந்து பாடியுள்ளன.

*''சுடுநீர் வரித்த செந்நில மருங்கின்*
*விடுநெறி ஈர் மணல் வாரணம் சிதரப்*
*பாம்புறை புற்றத்து ஈர்ம்புறம் குத்தி*

*மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு*
*உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ*
*ஊர்வயிற் பெயரும் பொழுதில் சேர்புடன்*
*கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்*
*ஆபூண் தெண்மணி ஐஐத இயம்பு இன்னிசை*
*புலம்பு கொள் மாலை கேட்டொறும்*
*கலங்கினள் உறைவோள்''*

முல்லை நில வருணனையோடு கூடிய அகப்பாடலொன்று மாலை நேரத்தை இவ்வாறு சிறப்பிக்கின்றது.

மழை பெய்ததன் காரணமாகச் செம்மண் நிலம் வறியதாகக் காட்சியளிக்கின்றது. அது முல்லைப்பகுதி, ஆயர்கள் வாழும் சிற்றூர். அங்கே மாலைக் காலம் வருகிறது. வாகனங்கள் செல்லும் வழியில் உள்ள ஈரமணலைக் கானக் கோழிகள் கிளறுகின்றன.

எருதுகளும் பசுக்களும் வயிறாரப் புல்லை மேய்ந்து வீடு திரும்பும் நேரம். எப்போதும் இளமையான பசு தன் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற இளங்காளையானது தனது கொம்பினால் பாம்புகள் வாழும் புற்றின் மேல்பகுதியைக் குத்திக் கிளறிக் கோட்டுமன் கொண்ட தோற்றத்துடன் ஊரை நோக்கித் திரும்பிவருகின்றது. பசுக்களின் கழுத்தில் கட்டியுள்ள தென்மணி ஓசை அந்த மாலைக் காலத்தில் தலைவியை மயக்கமுறச் செய்கிறது.

சங்கப்புலவர் வெள்ளைக் கண்ணத்தனார் காட்டும் மாலை நேரக் காட்சி இது. சங்கப் பாடலாதலின் உயர்வு நவிற்சியில்லாத தன்மைப் புனைவாக இப்பாடல் அமைந்துள்ளது.

இத்தகைய புனைவுகளை அடியொற்றிப் பிற்காலத்தில் மாலைக்கால வருணனைகள் பெருகின. அந்திவானம் காப்பியங்களில் பெரிதும் இடம் பெற்றது.

கதிரவன் மலைவாயிலில் மறையும் நேரமாதலின் அவனது செவ்வண்ணக் கதிர்கள் நிலவுலகில் பாய்ந்து எல்லாப் பொருட்களையும் தங்கமயமாகப் பொலியச் செய்கின்றன. இக்காட்சியை,

*''தங்கம் உருக்கித் தழல் குறைத்தத் தேனாக்கி*
*எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?''*

என்று பாடினார் பாரதியார். அவரது பாஞ்சாலி சபதத்தில் இவ்வருணனையின் வளர்ச்சி நிலையைக் காணமுடிகிறது.

பாண்டவருள் ஒருவனான அருச்சுனன் அத்தினாபுரம் செல்லும் வழியில் தன் காதலி திரௌபதைக்கு மாலையில் அந்தி வானத்தில் தோன்றும் அழகிய காட்சிகளைக் காட்டுகின்றான்.

### அந்திவானக் காட்சி

*"பார் சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்*
*எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!*
*என்னடீ இந்த வன்னத் தியல்புகள்?*
*எத்தனை வடிவம்! எத்தனை கலவை*
*தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி!*
*விட்ட ஓடைகள்! வெம்மை தோன்றாமே*
*எரிந்திடும் தங்கத் தீவுகள்! - பாரடீ!*
*நீலப் பொய்கைகள்! அடடா நீல*
*வன்ன மொன்றில் எத்தனை வகையடீ!*
*எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்*
*எத்தனை! கரிய பெரும்பெரும் பூதம்*
*நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத்*
*தோணிகள்! சுடரொளிப் பொற்கரை யிட்ட*
*கருஞ்சிக ரங்கள்! - காண்டி, ஆங்கு*
*தங்கத் திமிங்கலம் தாம்பல மிதக்கும்*
*இருட்கடல் ஆஹா எங்கு நோக்கினும்*
*ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக் களஞ்சியம்!"*

பிற்காலப் புலவர் தம் பாடல்களில் பெரும் அளவுக்கு அந்திவானம் புனையப்பட்டுள்ள காட்சியைக் கூறுவதற்கு இதுவே சான்றாகும்.

### பாவேந்தர் பாடலில்

பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பாவேந்தர் பாரதிதாசனும் அந்திவானத்தின் அழகுக் காட்சியைப் பின்வருமாறு புனைந்துரைக்கின்றார்.

அந்த அழகான மாலை வேளையில் வானம் தங்கத்தை உருக்கிவிட்டது போல் காட்சி தருகின்றது. அவ்வான ஓடையில் ஓர் செங்கதிர் மாணிக்கப்பழம் போல் சிவந்த சூரியன் மூழ்குகின்றது!

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 December 2010 MA/130/2011

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

## 2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

**இரா. அழகுமலை**
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்

**முனைவர் சு. விஜயன்**
முதல்வர் (பொறுப்பு)
செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர்
செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.